# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்

------

## அசல் வழக்கு எண்.39/2023

**2026 ஆம்** வருடம் ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1–இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னதுரை | ஜாதி | : | |
| த.பெ | : | சங்கப்பன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | வளையபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 54/2026 |
| தேதி | : | 14.08.2026 | | | |

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி குருசாமியின் மகள் தான் வாதி அமராவதி என்றால் சரிதான். குருசாமியின் மற்ற மகள்களான கருப்பாயி, நாகம்மாள், பழனியம்மாள் ஆகியோர்கள் உள்ளார்கள் என்றால் உள்ளார்கள். கருப்பாயி இறந்துவிட்டார் என்றால் சரிதான். நாகம்மாளிள் கணவர் பெயர் பழனிச்சாமி என்றால் சரிதான். கருப்பாயின் கணவர் முத்துச்சாமி என்றால் சரிதான். முத்துச்சாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். முத்துச்சாமியின் உடன்பிறந்த சகோதரர்கள் தான் 2ம் பிரதிவாதி பொன்னுச்சாமி, 3ம் பிரதிவாதி ராஜேந்திரன் என்றால் சரிதான். தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து வளையபட்டி ஊரில் கிழக்கு பகுதியில் உள்ளது என்றால் சரிதான்.

நீங்கள் வளையபட்டியில் மேற்குபகுதியில் குடியிருக்கிறீர்கள் என்றால் சரிதான். தாவா காலியிடத்திற்கு கிழக்கு பகுதியில் தென்வடல் வீதி உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்தின் வடக்குபுறத்தில் பூசாரி வீடு உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்தின் தெற்கு பகுதியில் யார் வீடு உள்ளது என்றால் கருப்பசாமி வீடு உள்ளது. கருப்பசாமி வீட்டின் மேற்குபுறத்தில் முத்துச்சாமி வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்குபுறத்தில் உள்ள வீட்டின் இடத்தை முத்துச்சாமி, பழனிச்சாமி என்பவரிடமிருந்து வாங்கினார் என்றால் சரிதான். முத்துச்சாமி பழனிச்சாமியிடம் இருந்து காலியிடமாக வாங்கி அதன் பிறகு தான் வீடு கட்டினார் என்றால் சரிதான். முத்துச்சாமியின் இடத்திற்கு தாவா இடத்தின் வழியாக தான் பாதை உள்ளது என்றால் சரியல்ல. முத்துச்சாமி மனைவி கருப்பாயி என்றால் சரிதான். கருப்பாயி தான் தாவா சொத்தை முருகன்

என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். முத்துச்சாமியின் வீட்டிற்கு பாதை வேண்டும் என்பதற்காக தான் தாவா சொத்தான காலியிடத்தை வாங்கினார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் மேற்கு பகுதியில் 2ம் பிரதிவாதி பொன்னுச்சாமி வீடு உள்ளது என்றால் சரிதான். பொன்னுச்சாமி வீட்டில் இருந்து கிழமேல் வீதிக்கு வருவதற்கு தாவா சொத்தின் வழியாக தான் வர வேண்டும் என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் வடக்கு பகுதியில் 2ம் பிரதிவாதி பொன்னுச்சாமி ஆடு, மாடுகளை கட்டி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மேற்கு பகுதியில் 2ம் பிரதிவாதி பொன்னுச்சாமி குப்பை போட்டு வைத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 2ம் பிரதிவாதி பொன்னுச்சாமி தாவா சொத்தில் குப்பை கொட்டியுள்ளார் என்றும், தாவா சொத்து வழியாக தான் பாதை உள்ளது என்று பாதையும் குறிப்பிட்டு காட்டியுள்ளார் என்றால் சரியல்ல. கருப்பாயி, முருகனிடம் இருந்து பெற்ற கிரையத்தொகையின் ஒரு பகுதியை 2ம் பிரதிவாதி பொன்னுச்சாமி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெற்றததற்காக கிரைய தொகையில் பாதியை 2ம் பிரதிவாதி பொன்னுச்சாமியின் தம்பி முத்துச்சாமி மற்றும் அவரது மனைவி கருப்பாயின் வருமானத்தை கொண்டு பாதி கிரைய தொகை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இந்த வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor